**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO. SC.63 /2021**
**Deposition of P.W. 1**

Name : அன்சார்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: **16.10.2024**

A2, A3 Present. A1 absent. Petition filed and allowed.

**<u>முதல் விசாரணை</u>–**

நான் சாமியார்மடம், நெடியான்கோடு என்ற இடத்தில் வசித்து வருகிறேன். நான் மீன் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும், இன்றைய தினம் ஆஜராகாத 1வது எதிரியையும் தெரியும். 09.09.2018ம் தேதி இரவு 08.30 மணிக்கு பிராந்தி கடை அருகே நான் மீன் கடை வைத்துள்ளேன். மீன் கடையில் வைத்து சண்டை வந்தது. பின்னர் நான் பிராந்தி கடைக்கு போனேன். மணிகண்டன் மற்றும் திபு , ஜஸ்டின் மூன்று பேரும் சண்டை போட்டார்கள். அதில் திபு, பீர் பாட்டிலால் என்னை குத்தினார். என்னுடன் இருந்த கார்த்திபன் என்பவரையும் எதிரிகள் மூவரும் பீர் பாட்டிலால் குத்தினார்கள். எனக்கு வயிறு, இடுப்பு, குறுக்கு ஆகிய இடங்களில் குத்துக்காயம் ஏற்பட்டது. கார்த்திபனுக்கு வலது பக்க இடுப்பில் குத்து பட்டது. தக்கலை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து போனார்கள். அங்கிருந்து ஆசாரிப்பள்ளம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக போனோம். போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான்

கொடுத்தது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

2வது சாட்சி கார்த்திபன் எனது நண்பர். சாட்சிகள் பிரேமன், சாதிக், புரூஸ் ஆகியவர்கள் எனது நண்பர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளின் வீடு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து 1 ½ கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். அதன்கோடு சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து 20 கி.மீ தூரம் இருக்கும் என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து திருவட்டார் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். நான் தேசீய நெடுஞ்சாலையில் மீன்கடை வைத்துள்ளேன். இரவு 08.30 மணிக்கு மீன்கடையில் வைத்து தகராறு நடந்தது. மீன் கடையில் நடந்த தகராறு குறித்து போலீசாரிடம் புகார் கொடுக்கவில்லை. பிராந்தி கடை அருகே 08.00 மணிக்கு தகராறு நடந்தது. தகராறு ½ மணி நேரம் நடந்தது. சாட்சி பிரேம் தகராறை விலக்கினார். தக்கலையிலிருந்து - மார்த்தாண்டம் செல்லக்கூடிய சாலையில் இருந்து 500 மீட்டர் தெற்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். பிராந்திக்கடைக்கு செல்வதற்கு தெற்கு பார்த்து மண்ரோடு உள்ளது என்றால் சரிதான். மண்ரோடு பிராந்திகடையில் சென்றடையும் என்றால் சரிதான். மண்ரோடு பாறை, கற்கள் உள்ள கரடுமுரடான பாதை என்றால் சரிதான். மண்ரோட்டிற்கு மேற்கு பக்கமும், கிழக்கு பக்கமும் உடைந்த பாட்டில்களை குவித்து வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ நாளன்று நான் பிராந்திக்கடைக்கு நடந்து தான் போனேன். குத்திய பாட்டில் பீர் இல்லாத காலி பாட்டில் ஆகும். பீர் பாட்டில் 1 அடி நீளம் இருக்கும் என்றால் சரிதான். பீர் பாட்டிலை தரையில் அடித்து உடைத்து என்னை குத்தினார்கள். பீர் பாட்டில் 30 செ.மீட்டர் சுற்றளவு கொண்ட

வட்டமான பாட்டில் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் வட்டமான உடைந்த பாட்டிலால் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரிதான். எதிரிகள் என்னை வேகமாகவும், பலமாகவும் குத்தினார்கள். எனது காயத்தில் உடைந்த பாட்டில் துண்டுகள் இருந்ததா என்று எனக்குத் தெரியாது. காயத்திலிருந்து ரத்தம் நிறைய வந்தது. எனது பேண்ட் மற்றும் சட்டையில் வட்ட வடிவில் கீறல் இருந்தது என்றால் சரிதான். எனது ஆடைகளில் ரத்தம் பட்டிருந்தது என்றால் சரிதான். கார்த்திபனையும், வட்ட வடிவிலான பாட்டிலை கொண்டு தான் குத்தினார்கள். என்னை குத்திய கலர் பாட்டில் கறுப்பு கலர் பாட்டில் ஆகும். கார்த்திபனை எந்த பாட்டிலால் குத்தினார்கள் என்று நான் பார்க்கவில்லை. நான் கார்த்திபனை 300 மீட்டர் துாரத்தில் வைத்து குத்தினார்கள். என்னை முதலில் குத்தியதால் நான் கீழே விழுந்து கிடந்தேன். அதன் பிறகு தான் கார்த்திபனை குத்தினார்கள். எனவே அதை நான் பார்க்கவில்லை. பார்த்திபனின் ஆடைகளிலும் அன்று ரத்தம் பட்டது. மண்தரையிலும் ரத்தம் பட்டிருந்தது. நான் ரத்தம் பட்ட ஆடைகளை போலீசாரிடம் கொடுக்கவில்லை. பாட்டிலை எதிரிகள் என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. சம்பவம் பிராந்திக்கடையிலிருந்து 300 மீட்டர் தொலைவில் நடந்தது. சம்பவத்தை தொடர்ந்து 20 நபர்கள் கூடினார்கள். என்னை புரோஸ் என்பவர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து போனார். கார்த்திபனை யார் அழைத்து போனார் என்றால் எங்கள் இருவரையும் சேர்த்து தான் அழைத்து போனார்கள். போலீசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. என்னை

போலீசார் சம்பவ நாளன்று இரவு 10.30 மணிக்கு விசாரித்தார்கள். எனக்கு குடிபழக்கம் உண்டு. கார்த்திபனுக்கும் குடிபழக்கம் உண்டு. சம்பவ



நாளன்று இருவரும் குடித்திருந்தோம் என்றால் நான் குடிக்கவில்லை. கார்த்திபனும் குடிக்கவில்லை. நானும், கார்த்திபனும் குடிபோதையில் இருசக்கர வாகனத்தில் பிராந்திக்கடைக்கு செல்லும் போது இடது பக்கமாக விழுந்து அங்கு கிடந்த பாட்டில்கள் குத்தி காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளின் மீதுள்ள கோபத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் வீடு சம்பவ நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து 6 கி.மீ தொலைவில் குட்டக்குழி என்ற இடத்தில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும், எனக்கும் உள்ள பணம் கொடுக்கல், வாங்கல் தகராறில் பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.